Downloaded from:-www.paritchai.com

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

எம். சாஹிர் சேர்

அறிவுமதி 5

EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES, MODEL - 2019

# மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை - 2019

வினாத்தாள் இல. 4

## வினாத்தாள் I

2019.05.04 / 09:30 - 10:15

45 நிமிடம்

சுட்டெண் :........................................

**பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :**

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.
* **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன. **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே** தருக.
* ஒவ்வொரு வினாவிற்கும் **மூன்று** விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவுசெய்து, அதன் கீழ்க் கோடிடுக.**
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

**விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்**

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |
| 6 | |
| 7 | |
| 8 | |
| மொத்தம் | |
| இறுதிப் புள்ளிகள் | |
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும் |
|---|---|
| முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன். | V/I/T |
| இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன். | V/I/T |
| மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன். | V/I/T/EMF |
| பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும். | V/I/T/CH |

Downloaded from:-www.paritchai.com


[பக். 2 ஐப் பார்க்க

Downloaded from:-www.paritchai.com




● **1, 2** ஆகிய வினாக்களில் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவின் நிழல் உருவைத் தெரிவுசெய்க.

**1.**



(1) (2) (3)


**2.**




(1) (2) (3)



● **3, 4** ஆகிய வினாக்களில் கோலத்திற்கேற்ப வெற்றிடத்தில் இருக்க வேண்டிய உருவைத் தெரிவுசெய்க.


**3.**





(1) (2) (3)

**4.**  இற்கு  எனின்,  இற்கு ..................... ஆகும்.



(1) (2) (3)

● **5, 6** ஆகிய வினாக்களில் வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

**5.** நூலகத்திற்கு நூல்கள் போன்று பேருந்துக்கு ............................

(1) வியாபாரிகள் (2) நடத்துநர் (3) பயணிகள்

**6.** மீனவனுக்குக் கடல் போன்று விளையாடுபவனுக்கு ............................

(1) மைதானம் (2) பந்து (3) துடுப்பு

[பக். 3 ஐப் பார்க்க

Downloaded from:-www.paritchai.com

Downloaded from:-www.paritchai.com



சுட்டெண் :.............................................

● பின்வரும் கவிதையை வாசித்து **7, 8** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

மனதில் உறுதி வேண்டும்
உடலில் வலிமை வேண்டும்
சோம்பலை விலக்கிட வேண்டும்
நாட்டுக்கு உழைக்க வேண்டும்.

**7.** இக்கவிதை தரும் முழுமையான செய்தி யாது ?

(1) சோம்பலை அகற்றிடுக.

(2) கடுமையாக வேலை செய்திடுக.

(3) நாட்டுக்குப் பெறுமதியுடையவனாகுக.

**8.** இக்கவிதையின்படி நாட்டுக்காக உழைக்கும் ஒருவரிடம் இருக்கத்தக்க இரு இயல்புகளாவன

(1) மனதில் உறுதியும் வேலையில் சோம்பலின்மையும்

(2) மனதை முன்னேற்றுதலும் உடலை வளர்த்தலும்

(3) மனதை உறுதிப்படுத்தலும் உடலை வளர்த்தலும்

● பின்வரும் கட்டத்தில் குறிக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு **9, 10** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| △ | = | உதவி | ● | = | சரியான |
| ✶ | = | மிகவும் | □ | = | செய்தமைக்கு |
| ▲ | = | இனிமையானது | ♦ | = | நன்றி |
| ■ | = | அழகானது | ᘓ | = | கீதம் |
| ○ | = | உமது | ✤ | = | இரக்கம் |

**9.** மரியாதையாக நடந்து கொள்வதற்கான கூற்றைக் காட்டும் குறியீட்டு வரிசையைத் தெரிவுசெய்க.

(1) ○△■▲ (2) △□✶♦ (3) ○△●▲

**10.** மதிப்பைக் கணிக்கும் கூற்றைக் காட்டும் குறியீட்டு வரிசையைத் தெரிவுசெய்க.

(1) ○ᘓ✶♦ (2) ○✤●■ (3) ○ᘓ✶▲

**11.** 2019ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் திகதி செவ்வாய்க்கிழமை எனின் 2020ஆம் ஆண்டு டிசெம்பர் 31ஆம் திகதி என்ன கிழமை ?

(1) செவ்வாய்க்கிழமை (2) புதன்கிழமை (3) வியாழக்கிழமை

**12.** முதலாம் வெற்றிடத்திற்கும் இரண்டாம் வெற்றிடத்திற்கும் முறையே மிகப் பொருத்தமான சோடிச் சொற்களைத் தெரிவுசெய்க.

மக்கள் தத்தம் அன்றாடக் கடமைகளை முடித்துவிட்டு ................................... வேளையிலே தாம் மன அமைதி பெறவும் ஆறுதலடைவதற்கும் அண்மையிலே காணப்படுகின்ற ................................... நாடிச் செல்வர்.

(1) படுத்திருக்கும், சிற்றுண்டிச்சாலைகளை

(2) களைத்திருக்கும், பூங்காக்களை

(3) மகிழ்ந்திருக்கும், பூங்காக்களை



Downloaded from:-www.paritchai.com

Downloaded from:-www.paritchai.com




**13.** மு.ப. 1.30 இற்கு கொழும்பு விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட ஆகாயவிமானம் ஒன்று அன்றைய தினமே பாங்கொக் நேரம் மு.ப. 6.00 மணிக்கு பாங்கொக் விமானநிலையத்தில் வந்திறங்கியது. கொழும்பு நேரம் மு.ப. 6.00 மணியாகும்போது பாங்கொக் நேரம் மு.ப. 7.00 மணியாகும். விமானப் பயணத்திற்கு எடுத்த நேரம் எவ்வளவு ?

(1) 2 மணித்தியாலம் 30 நிமிடங்கள்

(2) 3 மணித்தியாலம் 30 நிமிடங்கள்

(3) 4 மணித்தியாலம்

**14.** ஒரு சம்பவம் தொடர்பான ஐந்து உருக்கள் கீழே தரப்பட்டுள்ளன.



A B C D E

தரப்பட்டுள்ள உருக்களைச் சம்பவத்திற்கேற்ப ஒழுங்குபடுத்தும்போது பின்வருவனவற்றில் எது கிடைக்கும் ?

(1) A, E, C, B, D (2) B, C, D, A, E (3) C, A, E, B, D

**15.** 4 மீற்றர் நீளமும் 4 மீற்றர் உயரமும் உள்ள சுவருக்குப் பூச 4 லீற்றர் தீந்தை தேவைப்படுகிறது. 8 மீற்றர் நீளமும் 1 மீற்றர் உயரமும் உள்ள அத்தகைய ஒரு சுவருக்குப் பூச எத்தனை லீற்றர் தீந்தை தேவைப்படும் ?

(1) 3 லீற்றர் (2) 2 லீற்றர் (3) 1 லீற்றர்


**16.** கேசவனின் சகோதரி லதா ஆவார். லதாவிற்கு சம எண்ணிக்கையான சகோதரிகளும் சகோதரர்களும் உள்ளனர். கேசவனுக்கு உள்ள சகோதரர்களின் எண்ணிக்கையின் மூன்று மடங்கான சகோதரிகள் உண்டு. இக்குடும்பத்தில் உள்ள ஆண் பிள்ளைகளினதும் பெண் பிள்ளைகளினதும் எண்ணிக்கைகள் யாவை ?

(1) ஆண் பிள்ளைகள் 2, பெண் பிள்ளைகள் 3

(2) ஆண் பிள்ளைகள் 3, பெண் பிள்ளைகள் 3

(3) ஆண் பிள்ளைகள் 3, பெண் பிள்ளைகள் 4

**17.** கீழே தரப்பட்டுள்ள மூன்று உருக்களிலும் உள்ள சிறிய கட்டங்கள் ஒன்றுக்கொன்று சமனாகும். எவ் உருவைப் புள்ளிக் கோடுகளின் வழியே மடிப்பதன் மூலம் ஒரு சதுரமுகியை ஆக்க முடியாது ?



(1) (2) (3)

**18.** நிமலன், நாதன், மீனா, குமாரி என்ற நான்கு மாணவர்களில் இருவரை ஆசிரியை தெரிவுசெய்ய வேண்டியுள்ளது. அதனை ஒன்றிலிருந்தொன்று வேறுபட்ட எத்தனை விதங்களில் செய்யலாம் ?

(1) 2 (2) 4 (3) 6


[பக். 5 ஐப் பார்க்க

Downloaded from:-www.paritchai.com

Downloaded from:-www.paritchai.com





**19.** பின்வரும் உருக்களில் உள்ள எண் கோலத்திற்கேற்ப வெற்றிடத்தில் இருக்க வேண்டிய எண்ணைத் தெரிவுசெய்க.






(1) 65 (2) 66 (3) 67


● **20, 21** ஆகிய வினாக்களில் தொடக்கத்தில் உள்ள செவ்வகத்தாளை நடுவில் உள்ள புள்ளிக்கோடு வழியே இடப் பக்கத்தின் மீது வலப் பக்கத்தை மடிக்கும்போது தோற்றும் விதத்தைத் தெரிவுசெய்க.


**20.** 



(1)



(2)


(3)


**21.** 



(1)



(2)



(3)

**22.** பின்வரும் உருவில் அட்டைத்தாளினால் செய்யப்பட்ட ஒரு சதுரமுகி உள்ளது. அது விரிக்கப்படும் போது தோற்றும் விதம் யாது ?




(1)


(2)


(3)

**23.** ஆஷா கீதாவிலும் பார்க்க உயரம் கூடியவள். கீதா சீதாவிலும் பார்க்க உயரம் குறைந்தவள். சீதா ஆஷாவிலும் பார்க்க உயரம் கூடியவள். இம்மூன்று பேர்களிலும் உயரம் குறைந்தவரும் உயரம் கூடியவரும் முறையே இடம்பெறும் விடையைத் தெரிவுசெய்க.

(1) ஆஷா, கீதா ஆகியோர்
(2) கீதா, சீதா ஆகியோர்
(3) ஆஷா, சீதா ஆகியோர்

**24.** ஒரு புத்தகத்தின் விலை ரூ. 40 எனவும் ஒரு பென்சிலின் விலை ரூ. 12 எனவும் கடை ஒன்றின் விலைப்பட்டியலில் குறிப்பிடப்பட்டிருந்தது. அக்கடைக்குச் சென்ற சாலினி மூன்று புத்தகங்களையும் ஐந்து பென்சில்களையும் வாங்கிக் கொண்டு கடை உரிமையாளருக்கு ரூ. 50 காசுத் தாள்கள் மூன்றைக் கொடுத்தாராயின், கடை உரிமையாளர் மேலும் எவ்வளவு பணத்தை அவரிடம் கேட்பார் ?

(1) ரூ. 20 (2) ரூ. 30 (3) ரூ. 40


[பக். 6 ஐப் பார்க்க


Downloaded from:-www.paritchai.com


Downloaded from:-www.paritchai.com




**25.** சதுர வடிவம் உள்ள ஒரு தாள் முறையே X, Y என்னும் உருக்களில் உள்ள முறிந்த கோடுகள் வழியே அம்புக்குறிகள் காட்டும் திசை வழியே மூன்று தடவைகள் மடிக்கப்படுகின்றன. மூன்றாவதாக மடிக்கப்பட்ட தாளில் Z இல் காட்டப்பட்டுள்ளவாறு இரு வட்டங்களும் ஒரு முக்கோணியும் வெட்டி நீக்கப்படுகின்றன.



X



Y


Z

தாளை முற்றாக விரிக்கும்போது காணக் கிடைக்கும் உரு யாது ?


(1)


(2)


(3)


**26.** கிறீஸ் பூசப்பட்ட வழுக்கு மரம் ஒன்றில் ஒருவன் ஒரு பாய்ச்சலில் 3 அடிகள் ஏற 2 அடிகள் சறுக்கி கீழே வருவான். 10 அடிகள் உயரமான வழுக்கு மரத்தின் உச்சியைத் தொட எத்தனை பாய்ச்சல்கள் தேவைப்படும் ?


(1) 4 (2) 5 (3) 6


**27.** சுமதியின் தாய் கமலினி ஆவார். கமலினியின் சகோதரன் சுமன் ஆவார். சுமனின் தம்பி சுரேஷ் ஆவார் எனின், சுமதிக்கு சுரேஷ் என்ன உறவு முறை ?


(1) தந்தை (2) சிற்றப்பா (3) மாமா

**28.** வெறுமையாயுள்ள அடைப்புக்குப் பொருத்தமான உருவைத் தெரிவுசெய்க.





(1)


(2)


(3)

**29.** பின்வரும் இரு திண்மங்கள் தொடர்பாகவும் தரப்பட்டுள்ள கூற்றுக்களில் சரியானதைத் தெரிவுசெய்க.



(1) விளிம்புகளின் எண்ணிக்கை உச்சிகளின் எண்ணிக்கையிலும் குறைவானது.
(2) உச்சிகளின் எண்ணிக்கை முகங்களின் எண்ணிக்கையிலும் குறைவானது.
(3) முகங்களின் எண்ணிக்கை விளிம்புகளின் எண்ணிக்கையிலும் குறைவானது.

[பக். 7 ஐப் பார்க்க

Downloaded from:-www.paritchai.com


Downloaded from:-www.paritchai.com



● **30, 31** ஆகிய வினாக்களில் உள்ளவை ஓர் ஆடியில் விம்பமாகக் காட்சி தருகையில் அதே மாதிரித் தெரியும் இரு எழுத்துக்களும் இரு உருக்களும் எவை ?

**30.** **ES** (1) **KR** (2) **HV** (3)

**31.**




(1) (2) (3)


**32.** △ × □ = 72 ஆகவும் △ − □ = 1 ஆகவும் இருப்பின் △ + □ இன் பெறுமானம் யாது ?

(1) 16 (2) 17 (3) 18

**33.** Ⓢ, Ⓣ, Ⓤ என்னும் தள உருவங்களின் ஒரே எழுத்தினால் காட்டப்படும் பக்கங்களை இணைப்பதன் மூலம் பின்வரும் எவ்வடிவத்தைப் பெற்றலாம் ?




Ⓢ Ⓣ Ⓤ



(1) (2) (3)

**34.** எனது வயதின் இரண்டு மடங்கு அண்ணனின் வயது ஆகும். அண்ணனின் வயதைவிட அக்கா மூன்று வயது இளையவர். எனது வயது ஒன்பது எனின், எங்கள் மூவரினதும் வயதுகளின் கூட்டுத்தொகை யாது ?

(1) 39 (2) 42 (3) 45

**35.** ஒரு பெட்டியில் 6 நீலநிறப் பேனைகளும் 8 சிவப்புநிறப் பேனைகளும் உள்ளன. பேனைகளைப் பார்க்காமல் ஒரு நீலநிறப் பேனையைப் பெற்றுக்கொள்வதற்கு பெட்டியிலிருந்து ஆகக் குறைந்த எண்ணிக்கையான எத்தனை பேனைகளை வெளியே எடுக்க வேண்டும் ?

(1) 7 (2) 8 (3) 9

**36.** ஓர் இடத்திலிருந்து பயணத்தை ஆரம்பித்த மனிதன் ஒருவன் 20 மீற்றர் தெற்கு நோக்கியும் அவ்விடத்திலிருந்து 30 மீற்றர் கிழக்கு நோக்கியும் அவ்விடத்திலிருந்து 20 மீற்றர் வடக்கு நோக்கியும் சென்று, அவ்விடத்திலிருந்து மேற்கு நோக்கி 10 மீற்றர் சென்று பயணத்தை முடித்தான். அம்மனிதன் இப்போது தொடக்க இடத்திலிருந்து எவ்வளவு தூரத்தில் உள்ளான் ?

(1) 20 மீற்றர் (2) 15 மீற்றர் (3) 10 மீற்றர்

[பக். 8 ஐப் பார்க்க

Downloaded from:-www.paritchai.com


Downloaded from:-www.paritchai.com



**37.** ஒவ்வொன்றும் 20 சென்ரிமீற்றர் நீளமுள்ள 3 உலோகத் துண்டுகள் ஒரு தனித் துண்டாக ஒட்டப்பட்டன. ஒவ்வொரு தடவை ஒட்டும்போதும் ஒவ்வோர் உலோகத் துண்டின் 3 சென்ரிமீற்றரை ஒன்றன்மீதொன்று வைக்க நேரிட்டது. இறுதியாகக் கிடைக்கும் உலோகத் துண்டின் நீளம் எத்தனை சென்ரிமீற்றர் ?

(1) 50 சென்ரிமீற்றர் (2) 54 சென்ரிமீற்றர் (3) 56 சென்ரிமீற்றர்

**38.** கொழும்பிலிருந்து சிலாபம், புத்தளம் ஊடாக அநுராதபுரத்திற்கான தூரம் கீழே தரப்பட்டுள்ளது.





| இருந்து | வரைக்கும் | தூரம் |
|---|---|---|
| கொழும்பு | சிலாபம் | 76 km |
| கொழும்பு | புத்தளம் | 142 km |
| புத்தளம் | அநுராதபுரம் | 72 km |
| சிலாபம் | அநுராதபுரம் | …….. km |

சிலாபத்திலிருந்து புத்தளம் ஊடாக அநுராதபுரத்திற்கான தூரம் எத்தனை கிலோமீற்றர் ?

(1) 72 கிலோமீற்றர் (2) 138 கிலோமீற்றர் (3) 290 கிலோமீற்றர்

**39.** இவ்வுருவின் உள்ளேயும் வெளியேயும் உள்ள செங்கோணங்களின் மொத்த எண்ணிக்கை யாது ?



(1) 8 (2) 10 (3) 12

**40.** இரு பகுதிகளும் சமமாக இருக்கும் நிரையைத் தெரிவுசெய்க.

(1) ○○△○⬠△ = ○○○△⬠△

(2) ⬠○△△⬠○ = ⬠○△△⬠○

(3) △○⬠○△⬠ = △⬠○○△⬠

* * *

Downloaded from:-www.paritchai.com

Downloaded from:-www.paritchai.com

ஸියලු ම හිමිකම් ඇවිරිණි/
முழுப் பதிப்புரிமையுடையது ]
All Rights Reserved]

எம். சாஹிர் சேர்

அறிவுமதி 5

EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES, MODEL - 2019

**மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை - 2019**

வினாத்தாள் இல. 4

# வினாத்தாள் II

2019.05.04 / 10:45 - 12:00

**1 மணித்தியாலம் 15 நிமிடம்**

சுட்டெண் :.............................................

**பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :**

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
* **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* இவ்வினாத்தாளில் **60** வினாக்கள் உள்ளன. சில வினாக்களில் உபபகுதிகளும் உள்ளன.
* **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ் வினாத்தாளிலேயே எழுதுக.**
* விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
* விடையின் கீழ்க் கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும் போது **சரியான விடையைத் தெரிவுசெய்து, அதன் கீழ்க் கோடிடுக.**
* செய்து பார்ப்பதற்காகத் தாளொன்று வழங்கப்படும்.

**விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்**

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |
| 6 | |
| 7 | |
| 8 | |
| மொத்தம் | |
| இறுதிப் புள்ளிகள் | |
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும் |
|---|---|
| முதலாவது பரீட்சகர்<br>புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன். | V/II/T |
| இரண்டாவது பரீட்சகர்<br>முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன். | V/II/T |
| மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர்<br>மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன். | V/II/T/EMF |
| பிரதான பரீட்சகர்<br>மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும். | V/II/T/CH |

Downloaded from:-www.paritchai.com

Downloaded from:-www.paritchai.com



**1.** பின்வரும் பந்தியை வாசிக்க.

அழகை அனைவரும் விரும்புகின்றோம். நாம் வாழும் வீடு அழகாக இருக்க வேண்டும். அழகுக்கு மேலும் அழகு தருவது தொட்டிகளில் வளர்க்கப்படும் வண்ண வண்ண மீன்களே! சுறுசுறுப்பாக நீந்திச் செல்லும் மீன்கள் வற்றாத மகிழ்ச்சியை எமக்குத் தருகின்றன. அலங்கார மீன்களை வளர்ப்பது எமது உடல் நலத்திற்கு நல்லது எனக் கூறுவர். இவற்றைப் பார்த்து மகிழ்வதால் மன அழுத்தம் குறைகிறது. இரத்த அழுத்தம் உடையவர்களுக்கு அது குறைவதாகக் கண்டறிந்துள்ளனர். எனவே நாமும் அழகிய மீன்களைத் தொட்டிகளில் வளர்த்துப் பயன் பெறுவோம்.

பந்தியை **மாத்திரம்** துணையாகக் கொண்டு விடையளிக்குக.

(i) நாம் வாழும் வீடு எப்படி இருக்க வேண்டும் ? :..................................................

(ii) அலங்கார மீன்களைப் பார்த்து மகிழ்வதால் எது குறைகிறது ? :..................................................

(iii) 'மெய்' என்பதற்கு ஒத்த கருத்துள்ள சொல்லைத் தெரிவுசெய்து எழுதுக.

:..................................................

(iv) 'சோம்பலாக' என்பதற்கு எதிர்க் கருத்துள்ள சொல்லைத் தெரிவுசெய்து எழுதுக.

:..................................................

(v) விசிறியும் சுழியும் கொண்ட எழுத்தையுடைய சொல்லைப் பந்தியிலிருந்து கண்டு பிடித்து எழுதுக.

:..................................................

(vi) பந்தியில் குறிப்பிடப்படும் அடுக்குத்தொடரை எழுதுக. :..................................................

**2.** பின்வரும் சொற்கள் இரண்டு சொற்களினால் ஆக்கப்பட்டவை. அவற்றின் முதல் எழுத்துக்கள் மாறியுள்ளன. **சரியான சொல்லை ஆக்கி** எழுதுக.

(i) உலை மச்சி :..................................................

(ii) ஆடல் கமை :..................................................

**3.** பின்வரும் வாக்கியங்களில் உள்ள எழுத்துப் **பிழைகளைத் திருத்தி** அவ்வாக்கியங்களை எழுதுக.

(i) நேற்று மலை பெய்தது. :..................................................

(ii) நான் மனல் வீடு கட்டினேன். :..................................................

**4.** சரியான **வினைச்சொல்லின்** கீழ்க் கோடிடுக.

(i) பூந்தோட்டத்தில் மல்லிகைப் பூக்கள் (மலர்ந்தது / மலர்ந்தன)

(ii) நான் எனது தங்கையுடன் பாடசாலைக்குச் (சென்றேன் / சென்றோம்)

(iii) நூலகத்தில் அனைத்துத் துறை சார்ந்த நூல்களும் (இருந்தது / இருந்தன)

**5.** பின்வரும் இறந்தகால வாக்கியங்களை **நிகழ்கால** வாக்கியங்களாக மாற்றி எழுதுக.

(i) புறாக்கள் பறந்து சென்றன.

:..................................................

(ii) அவர்கள் வயலில் வேலை செய்தனர்.

:..................................................

**6.** பின்வருபவை அறிவித்தல் ஆயின் ○ எனவும் அறிவுறுத்தல் ஆயின் △ எனவும் அடையாளம் இடுக.

(i) வீதியின் வலது புறமாக நடந்து செல்லுங்கள். (..........)

(ii) நாளை நாடு பூராகவும் இடியுடன் கூடிய மழை பெய்யும். (..........)

Downloaded from:-www.paritchai.com

[பக். 3 ஐப் பார்க்க

Downloaded from:-www.paritchai.com



சுட்டெண் :...........................................

7. பின்வரும் பழமொழியைப் பூர்த்தி செய்க.

குப்பையிற் கிடந்தாலும் ................................... மங்காது.

8. தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.

பேசுதல் / பெரியவர்களின் / வேண்டும் / புண்படுத்தாமல் / மனதைப்

.....................................................................................................................................................

9. சரியாக எழுத்துக் கூட்டப்பட்டுள்ள சொல்லின் கீழ்க் கோடிடுக. (தொழிலாளி / தொழிலாழி)

10. நூலுக்கு இன்னொருவரால் வழங்கப்படும் உரை (முன்னுரை / அணிந்துரை)


11. பின்வரும் இணைமொழியைப் பூர்த்தி செய்க.

சீரும் ....................................

12. பின்வரும் ஆங்கிலச் சொற்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.

(i) world :.......................................... (ii) circle :..................................................

13. பின்வரும் ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை, ஆங்கில எழுத்துக்களிலேயே எழுதுக.

(i)  (ii) 

.................................... ....................................

14. பின்வரும் ஆங்கில வாக்கியங்களில் உள்ள வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்க.

(i) May I ............................ (come / comes) in ?

(ii) I am ............................ (drink / drinking) water.

15. (i) 'தும்ரிய ஸ்தானய' என்னும் சிங்களச் சொல்லின் கருத்தைத் தமிழில் எழுதுக. :.................................

(ii) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தைத் தமிழ் எழுத்துகளில் எழுதுக.

விலையைக் குறைக்க முடியாதா ? :..........................................................................

● தரப்பட்டுள்ள புள்ளிக் கோடுகளில் விடைகளை எழுதுக.

16. எழுத்தில் தரப்பட்டுள்ள எண்ணை இலக்கத்தில் எழுதுக.

எண்பதாயிரத்து முந்நூற்று இருபத்தெட்டு :...................................

17.

| | |
|---|---|
| 9 | 2 |
| 3 | 5 |

பெட்டியில் தரப்பட்டுள்ள எல்லா இலக்கங்களையும் பயன்படுத்தி அமைக்கத்தக்க மிகச் சிறிய எண்ணை எழுதுக.

:...................................

18. தரப்பட்டுள்ள ஒவ்வோர் எண் கோலத்திலும் உள்ள இடைவெளிக்குப் பொருத்தமான எண்ணை எழுதுக.

(i) 24, 32, 40, 48, ...... (ii) 8, 16, 32, ......, 128

19. ஒரு விவசாயச் சங்கத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்து கொடுப்பதற்குக் கொண்டுவரப்பட்ட தென்னங் கன்றுகளின் எண்ணிக்கை 584 ஆகும்.

(i) ஒருவருக்கு 3 தென்னங் கன்றுகள் வீதம் எத்தனை உறுப்பினர்களுக்குப் பகிர்ந்து கொடுக்கலாம் ?

:...................................

(ii) எஞ்சியிருக்கும் தென்னங் கன்றுகளின் எண்ணிக்கை யாது ? :...................................

Downloaded from:-www.paritchai.com


Downloaded from:-www.paritchai.com



**20.** பி.ப. 8.45 இற்குக் கொழும்பிலிருந்து புறப்பட்ட ஒரு பேருந்துவண்டி மறுநாள் மு.ப. 6.15 இற்கு யாழ்ப்பாணத்தை அடைந்தது. பயணத்துக்குச் செலவாகிய மொத்த நேரம் எவ்வளவு ?

: ........மணி ................நிமிடம்

**21.** ஒவ்வொரு பாத்திரத்திலும் காட்டப்பட்டுள்ள நீரின் கனவளவைக் கொண்டு விடையளிக்குக.





(i) பாத்திரங்கள் B இலும் C இலும் உள்ள நீரின் மொத்தக் கனவளவு எவ்வளவு ?

: .......... *l* .............. *ml*

(ii) எவ்விரு பாத்திரங்களில் உள்ள நீரின் மொத்தக் கனவளவு 9*l* 775*ml* ஆகும் ?

: ................................

**22.**





உருவில் உள்ள பெட்டிகள் மூன்றினதும் மொத்த உயரம் மீற்றர், சென்ரிமீற்றர் ஆகியவற்றில் எவ்வளவு ?

: .......... m ............ cm

**23.** பழைய செய்தித்தாள்களை வாங்கும் வர்த்தகர் ஒருவர் குமாரின் வீட்டிலிருந்து 7kg 850g செய்தித்தாள்களையும் ராதாவின் வீட்டிலிருந்து 3kg 400g செய்தித்தாள்களையும் வாங்கினார் வர்த்தகர். வாங்கிய பழைய செய்தித் தாள்களின் மொத்த நிறை யாது ?

: ......... kg ............... g


**24.**



உருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதியைத் தசம எண்ணாக எழுதுக.

: ................................

**25.**




இவ்வுருவில் காட்டப்பட்டுள்ள கம்பிச் சட்டத்தில்


(i) a, b, c எனப் பெயரிடப்பட்டுள்ள மூன்று கம்பிகளினதும் மொத்த நீளம் எவ்வளவு ?

: ..............................m

(ii) கம்பிச் சட்டத்தின் சுற்றளவு எவ்வளவு ?

: ..............................m

**26.**



பின்வரும் உருவில் காட்டப்பட்டுள்ளவாறு ஒரு பெரிய சதுரத்தில் சிறிய சதுரங்கள் பல வரையப்பட்டுள்ளன. ஒரு சிறிய சதுரத்தின் பரப்பளவு $1cm^2$ எனில் பெரிய சதுரத்தின் பரப்பளவு யாது ?

: ..........................$cm^2$

Downloaded from:-www.paritchai.com

[பக். 5 ஐப் பார்க்க

Downloaded from:-www.paritchai.com




**27.** பின்வரும் பின்னங்களைக் கூட்டுக. $\frac{1}{4} + \frac{3}{8}$ =.............................

**28.** அமலனின் வீட்டிலிருந்து பாடசாலைக்கு உள்ள தூரம் 10 km ஆகும். அவன் பாடசாலைக்கு அத்தூரத்தின் $\frac{2}{5}$ இனைச் சைக்கிளில் சென்றான். மீதித் தூரத்தைப் பேருந்தில் சென்றான். அவன் பேருந்தில் சென்ற தூரம் எவ்வளவு ?

:.............................km

**29.** குறித்த ஒரு பாடசாலையின் மாணவர்கள் அதிகமாக விரும்பும் விளையாட்டு தொடர்பான தகவல்கள் வரைபில் காட்டப்பட்டுள்ளன.




(i) பட்மின்ரன் விளையாட்டை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை 45 ஆகும். அதனை வரைபில் வரைந்து காட்டுக.

(ii) அதிகமான மாணவர்கள் விரும்பும் விளையாட்டு எது ?

:.......................................

(iii) அவ்விளையாட்டை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

:.......................................

● **30** தொடக்கம் **59** வரையிலான ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவுசெய்து **அதன் கீழ்க் கோடிடுக.**

**30.** ஒரு நாட்டுக்கே உரித்தான பறவைகள் மாத்திரம் அடங்கியுள்ள விடையைத் தெரிவுசெய்க.

(1) காட்டுச் செண்பகம், அழகிய சொர்க்கம், புள்ளிக்கோட்டி
(2) நரைப்புழுணி, செம்முகப் பூங்குயில், நெருப்புக்கோழி
(3) இலங்கை நாகணவாய், புள்ளிக்கோட்டி, கொம்பு ஓணான்
(4) காட்டுக்கோழி, நரைப்புழுணி, அழகிய சொர்க்கம்

**31.** பெப்ரவரி மாதம் பூப்பூக்கும் தாவரம்

(1) மா (2) பாலை (3) முருங்கை (4) வாகை

**32.** வண்ணத்துப்பூச்சியின் வாழ்க்கை வட்டத்தின் எப்பருவத்தில் தாவர இலைகளை உணவாக உட்கொள்ளும் ?

(1) முட்டை (2) குடம்பி (3) கூட்டுப்புழு (4) நிறையுடலி

**33.** உணவாகப் பயன்படுத்தும் வித்து அல்லாதது

(1) பாசிப்பயறு (2) சோளம் (3) நெல் (4) வட்டுக்கத்தரி

**34.** ஒரு நாட்டுக்கே உரித்தான தாவரம்

(1) ஈரப்பலா (2) வேம்பு (3) பெரும்பிரம்பு (4) மஞ்சள்

**35.** இனிப்பான உணவுகள், மாப்பொருள் உணவுகள் என்பவற்றை அதிகம் உண்ணுவதால் ஏற்படக்கூடிய நோய்

(1) நீரிழிவு (2) சின்னமுத்து (3) வாந்திபேதி (4) மஞ்சட்காமாலை

**36.** புரதம் அதிகம் அடங்கியுள்ள ஓர் உணவுக்கான உதாரணம்

(1) மரவள்ளி (2) பசளி (3) கரட் (4) போஞ்சி

Downloaded from:-www.paritchai.com

[பக். 6 ஐப் பார்க்க

Downloaded from:-www.paritchai.com



**37.** எலியினால் பரவக்கூடியது

(1) மலேரியா (2) கழிச்சல் (3) நீர்வெறுப்பு நோய் (4) கொள்ளை நோய்

**38.** நீரில் நீந்துவதற்கு ஏற்ற பாதத்தைக் கொண்ட விலங்கு

(1) கொக்கு (2) வாத்து (3) பருந்து (4) காகம்

**39.** 

இலங்கையின் நற்பெயரைக் கட்டியெழுப்புவதற்குப் பங்களிப்புச் செய்த உருவில் காணப்படுபவர்

(1) அநகாரிக தர்மபால
(2) பண்டிதர் டபிள்யு. டீ. அமரதேவ
(3) ஆதர் சீ. கிளாக்
(4) கலாநிதி ஆனந்த குமாரசுவாமி

**40.** வளவை கங்கை கடலிற் சேரும் இடம்

(1) அம்பலாந்தோட்டை (2) திருகோணமலை
(3) கொழும்பு (4) களுத்துறை


**41.** இலங்கையின் அரச இலச்சினையில் 'நிலைத்திருப்பைக்' குறிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள குறியீடு யாது ?


(1) நிறைகுடம் (2) நெற்கதிர்கள் (3) தர்ம சக்கரம் (4) சூரியன், சந்திரன்


**42.** கண்கள், காதுகள் என்பனவற்றின் மூலம் தகவல்கள் பெறத்தக்க ஊடகங்கள் முறையே


(1) வானொலி, அரங்கு (2) செய்திப்பத்திரிகை, வானொலி
(3) தொலைக்காட்சி, சுவரொட்டி (4) ஒலிபெருக்கி, தொலைபேசி

**43.** 'இப்பக்கம் மேலே' என்பதைக் காட்டுவதற்கு பயன்படும் உருவக் குறியீடு யாது ?


(1)


(2)


(3)



(4)

**44.** சூரியக் குடும்பத்தில் மிகவும் வெப்பமான கோள்


(1) செவ்வாய் (2) புதன் (3) வியாழன் (4) வெள்ளி

**45.** மின்குமிழை ஒளிரச் செய்வதற்காக A, B என்னும் இரு ஆணிகளையும் தொடுப்பதற்கு பயன்படுத்த முடியாதது


(1) செப்புக்கம்பி
(2) ரிசுத்தாள்
(3) ஈயத்தாள்
(4) அலுமினியக்கம்பி





**46.** நீர் கலக்கப்பட்ட பெற்றோல் உள்ள பாத்திரத்தில் அக்கலவை காணப்படும் விதத்தைக் காட்டும் உரு எது ?




(1)



(2)



(3)



(4)

Downloaded from:-www.paritchai.com

பக். 7 ஐப் பார்க்க

Downloaded from:-www.paritchai.com



**47.** வட மாகாணம், தென் மாகாணம் ஆகியவற்றில் காணப்படும் மாவட்டங்களின் எண்ணிக்கை முறையே யாவை ?

(1) 4, 2 (2) 4, 3 (3) 5, 2 (4) 5, 3

**48.** நீரின் மூலம் பரம்பலடையும் வித்துக்கள் கொண்டுள்ள விசேட பண்பு யாது ?

(1) முள், ஒட்டும் தன்மை ஆகியவற்றைக் கொண்டிருத்தல்
(2) பாரம் குறைந்த மெல்லிய நார்களைக் கொண்டிருத்தல்
(3) சிறிய பூச்சிகளின் வடிவத்தை ஒத்திருத்தல்
(4) தொடும்போது அதிர்ந்து வெடிக்கத்தக்கதாக இருத்தல்

**49.** உடலிலிருந்து நீர் வெளியேறும் ஒரு சந்தர்ப்பம் **அல்லாதது**

(1) வியர்வை (2) சிறுநீர் (3) வெளிச்சுவாசம் (4) உட்சுவாசம்

**50.** 'நுகந்தடி' பயன்படுத்தப்படுவது

(1) மட்பாண்டக் கைத்தொழிலில் (2) விவசாயக் கைத்தொழிலில்
(3) ஆடைக் கைத்தொழிலில் (4) உலோகக் கைத்தொழிலில்

**51.** அபய வாவியைக் கட்டுவித்த அரசன்

(1) பண்டுகாபயன் (2) தாதுசேனன் (3) தேவநம்பியதீசன் (4) மகாசேனன்

**52.** வித்துக்கள் நேரடியாகப் பாத்திகளில் நடப்படுகின்ற பயிர்வகைகளை மாத்திரம் கொண்ட விடையைத் தெரிவுசெய்க.

(1) வெண்டி, கோவா, மிளகாய் (2) போஞ்சி, பீர்க்கு, முள்ளங்கி
(3) கரட், பசளி, தக்காளி (4) கத்தரி, சோளம், பயற்றை

**53.** இலங்கையை இறுதியாக ஆட்சி செய்த வெளிநாட்டவர் யார் ?

(1) போர்த்துக்கேயர் (2) ஒல்லாந்தர் (3) ஆங்கிலேயர் (4) ஸ்பானியர்

**54.** கைமரத்தினூடாகச் செல்லும் துளையைத் துளைப்பதற்குப் பயன்படும் உபகரணம்

(1) அரம் (2) துறப்பணம் (3) உளி (4) சீவுளி

**55.** ஒருவருடைய காலில் நாய் கடித்துள்ள சந்தர்ப்பத்தில் அவருக்கு முதலுதவி வழங்கும்போது முதலில் செய்ய வேண்டியது

(1) நாயைக் கண்டுபிடித்து இனங்காணல்
(2) கடித்த இடத்தைத் தூய தண்ணீரால் கழுவுதல்
(3) காயத்தின் மீது கைமருந்து பூசுதல்
(4) சூடான பானத்தைப் பருகக் கொடுத்தல்

**56.** பாடசாலையில் ஆபத்து ஏற்படுவதற்கு அதிக சாத்தியமுள்ள சந்தர்ப்பம் ஒன்று

(1) பாரிய மரங்களில் பட்டுப்போன கிளைகளைத் தறித்து விடுதல்.
(2) காடு மண்டியுள்ள இடங்களைத் துப்பரவு செய்யாதிருத்தல்.
(3) பாடசாலை வளவினுள் வாகனங்கள் உட்செல்வதைத் தடைசெய்தல்.
(4) நிலத்தில் வெளிப்பட்டுக் காணப்படும் வேர்கள், கற்கள் போன்றவற்றை அப்புறப்படுத்தல்.

**57.** பின்வருவனவற்றுள் எது நீருடன் பிணைந்த தமிழர்களின் திருமணப் பழக்கம் ?

(1) புதுமணத் தம்பதிகளுக்கு கையில் நீர் வார்த்தல்.
(2) நீர்ப்பாத்திரங்களைக் கொடுத்து வரவேற்றல்.
(3) நீர் நிரம்பிய பாத்திரத்தில் வெண்ணிறப் பூக்களைப் போட்டு எடுத்துச் செல்லல்.
(4) நீர்க்குடத்தில் மோதிரத்தை இட்டு அதனை மணமகனும் மணமகளும் தேடி எடுத்தல்.

[பக். 8 ஐப் பார்க்க

Downloaded from:-www.paritchai.com


Downloaded from:-www.paritchai.com



**58.** "கடமைகளை நிறைவு செய்கின்றோரை, பொறுப்புடன் வேலை செய்கின்றோரை எனது வீட்டிலும் பாடசாலையிலும் சந்திக்கக் கிடைக்கட்டும்." இவ் எண்ணம் மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்டின் எத்தனையாவது படிமுறைக்கு உரியதாகும் ?

(1) இரண்டாம் (2) மூன்றாம் (3) நான்காம் (4) ஐந்தாம்

**59.** கீழே உள்ள ஆக்கத்தில் அட்டைத்தாளினால் செய்யப்பட்ட வண்ணத்துப்பூச்சி அந்தரத்தில் நின்று அசைவதற்கு அதன் உடலினுள் செலுத்தப்பட்டிருக்கும் பொருள் எது ?



(1) பிளாத்திக்குத் துண்டு
(2) குண்டூசி
(3) மெல்லிய கண்ணாடிக்கீலம்
(4) ஈர்க்குத் துண்டு

**60.** "காந்தனும் அவனுடைய நண்பர்களும் ஆற்றுக்குக் குளிக்கச் சென்றனர். அவர்கள் ஆற்றங்கரையில் வழக்கம்போல விளையாடிவிட்டுக் குளிப்பதற்காக நீரில் இறங்கினர். இது ஒரு நிகழ்ச்சியின் தொடக்கமாகும். இதன் பின்னர் நடைபெறுவதாக நீர் கருதும் விடயங்கள் பற்றி **மூன்று** வாக்கியங்களை எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்துக்குக் குறையாத சொற்களைக் கொண்டிருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலை தொடர்புகளும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

1. ..............................................................................................................

..............................................................................................................

2. ..............................................................................................................

..............................................................................................................

3. ..............................................................................................................

..............................................................................................................

❊❊❊

Downloaded from:-www.paritchai.com